# அம்பலங்கொட பிரதேச சபை

## காலி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

-------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அம்பலாங்கொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்புகள் என உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா ரூபா 12,492,108 தொகையினை அனைத்து நிகழ்ச்சித்

திட்டங்களின் இடையே பகுத்தீடு செய்யப்படாமல் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆயுள்வேத உதவி என கிடைத்திருந்த ரூபா 329,412 பெறுமதியான மருந்து இருப்புக்கள் மற்றும் ரூபா 329,400 இற்கான 3600 லீற்றர் தார் நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான சபை அமர்வுப்படி ரூபா 1,129,000 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 637,800 என காட்டப்பட்டிருந்தமையால் சபை அமர்வுப்படி செலவுகள் ரூபா 491,200 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது முன்பள்ளி மாணவர்களின் சீருடைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 171,150 இற்கான மீண்டுவரும் செலவுகள் என காட்டப்படாமல் மூலதனச் செலவுகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) முன்னைய ஆண்டின் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,194,524 தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என காட்டியிருந்தமையால் மீளாய்வாண்டின் மூலதன செலவுகள் ரூபா 2,194,524 இனால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தின் செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 7,498,394 தொகை மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் ஆண்டிற்கான மூலதன செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 7,498,394 இனால் குறைவாகவும், அத் தொகை வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய மூலதன உதவி மற்றும் மூலதன வருமானங்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காமையால் ஆண்டிற்கான மூலதன வருமானம் மற்றும் கடன்பட்டோர் மீதி ரூபா 7,498,394 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டிற்கான நிர்மான வேலைகள் தொடர்பான மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 1,696,102 தொகை மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி ரூபா 1,696,102 இனால் மிகையாகவும், திரண்ட நிதியத்தின் மீதி அதே தொகையால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) அலுத்வல சிறுவர் பூங்காவிற்காக விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக முன்னைய ஆண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 400,000 இற்கான முற்பணம் ஆண்டிற்கான செலவுகள் என நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் ரூபா 400,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது மீட்டியாகொட வாராந்த சந்தையின் நிர்மாண வேலைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,340,023 இற்கான செலவுகள் மற்றும் மீட்டியாகொட வர்த்தக தொடர் கட்டடத்தை உரித்தாக்குவதற்காக நட்டஈடு ஒன்றாக செலுத்தியிருந்த ரூபா 245,000 தொகையினை மூலதனப் படுத்தியிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 2,019,667 தொகை எனினும், வருடத்திற்கான வருமானங்கள் என ரூபா 1,000,000 தொகை மாத்திரம் ஏற்பாடு செய்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 1,019,667 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஊழியர்களுக்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதிய

பங்களிப்புத் தொகை ரூபா 3,658,873 தொகைக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை

----------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 193,335,467 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளதுவரை பேணப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், கணிப்பீட்டு சபை அறிக்கைகள் மற்றும் மீதியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் என்பன கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,660,949 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,899,015 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வீத வரி

-------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பகுதிகள் என மின் வசதிகள், தொலைபேசி வசதிகள், நீர் வசதிகள், பிரதேச சபைகளினால் கழிவுப் பொருட்கள் அகற்றுதல் போன்றன மேற்கொள்ளப்படும் படபொல நகரம் போன்ற பகுதிகள் காணப்பட்ட போதும் அப் பகுதிகளை இனங்கண்டு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் 134(1) மற்றும் (2) பிரிவுகளின் பிரகாரம் உதவி ஆணையாளரினதும் மற்றும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 ஏக்கர்வரி மற்றும் வாடகை

-------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபையினால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 164,067 இற்கான ஏக்கர்வரி மற்றும் ரூபா 85,555 இற்கான வாடகை 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,437,677 இற்கான நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 20,000,000 முத்திரை கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

2.2.4 கடைகளை வாடகைக்கு கொடுத்தல்

-------------------------------------------------------

சபைக்கு சொந்தமான வர்த்தக தொடர்கட்டடங்களில் கடைகளை வாடகைக்கு கொடுக்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 ஏப்ரல் மாதத்தில் பெறுமதி மதிப்பிட்டு திணைக்களத்தில் இருந்து அனுப்பியிருந்த புதிய பெறுமதி மதிப்பீடுகளின் பிரகாரம் மறுசீரமைக்கப்பட்ட கடை வாடகையின் அடிப்படையில் அறவிடப்படாமல் 2013 ஆண்டின் போது 36 கடைகளில் இருந்து ரூபா 612,400 இற்கான வருடாந்த வாடகை ஒன்றினை சபை இழந்துள்ளது.

(ii) கடைகள் வழங்கும் போது வாடகையாளர்களுடன் மேற் கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் 06 வது நிபந்தனையில் குறிப்பிட்டவாறு வாடகையாளர் கடையின் அல்லது அதனது ஒரு பகுதியை அனுபவிக்கும் உரிமையை வேறு ஒரு நபருக்கு விற்பனை செய்தல், சாட்டுதல் மேற்கொள்ளல், இடைவாடகைக்கு கொடுத்தல் சபையின் எழுத்து மூல அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்படக் கூடாது எனினும் 07 கடைகள் இடை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும் உடன்படிக்கை நிபந்தனை 20 இன் பிரகாரம் கடைகள் பண்டக் களஞ்சியங்களாக பயன்படுத்தக் கூடாது எனினும் 03 கடைகளில் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(iii) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய இலக்கம் 2010/01 கொண்ட சுற்று நிருபத்தின் மூலம் அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும் எனினும் வாடகைக்கு கொடுத்திருந்த 36 கடைகள் தொடர்பாக அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டிருந்த 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் 2011 மற்றும் 2012 ஆண்டுகளுக்கான சபையின் தலைவர், உபதலைவர், உட்பட சபை மந்திரிமார் எவரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று வழங்கியிருக்கவில்லை. அத்துடன் 2013 ஆண்டிற்கான தலைவர், உபதலைவர் மற்றும் 08 மந்திரிமார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று வழங்கியிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---------------------------------------------------

சபைக்கு சொந்தமான இரண்டு டிரக்டர் வண்டிகள் 05 - 09 ஆண்டு வரையான காலப்பகுதியில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது என 2013 திசெம்பர் 13 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்